## ஜும்ஆ - பயான் செய்யக்கூடியவர்கள் பற்றிய ஹதீஸ்கள் தொடர்பான ஜமாஅதுல் முஸ்லிமீனின் ஆய்வின் முடிவு.

முஸ்னத் அஹ்மதின் 24001 ஹதீஸில் கூறப்படுகின்ற விடயம் என்னவென்றால், அல்குஸ்ஸாஸு தலாததுன் - உரை நிகழ்த்துபவர்கள் மூவர். முதலாமவர் அமீர். இரண்டாமவர் ம.்.மூர் - ஏவப்பட்டவர். மூன்றாமவர் அல் முஹ்தால் - பெருமைக்குரியவர். இந்த ஹதீஸின் அடிப்படையில் உரைகளை நிகழ்த்தும் போது அமீர் நிகழ்த்த வேண்டும். இது பெருமையில் அடங்காது. அல்லது அமீரால் ஏவப்பட்டவர் உரையை நிகழ்த்த வேண்டும். இதுவும் பெருமையில் அடங்காது. இது அல்லாதவர்கள் உரை நிகழ்த்தினால் அத்தகையவர்கள் பெருமைக்குரியவர்களாகக் கருதப்படுவார்கள். இந்த ஹதீஸின் அடிப்படையில் எவராவது ஒருவர் அமீரிடத்தில் சென்று உரை நிகழ்த்த அனுமதி கோரக்கூடாது. அமீரால் ஏவப்பட்டால் மாத்திரமே உரைகளை நிகழ்த்த வேண்டும் என்கின்ற விடயம் இதிலிருந்து பெறப்படுகின்றது. முஸ்னத் அஹ்மதின் இதே கருத்தைத் தரும் ஹதீஸான 6661 வது ஹதீஸில் ‘பெருமைக்குரியவர்’ என்ற வாசகத்திற்குப் பதிலாக ‘முகஸ்துதிக்காகச் செய்பவர்’ என்கின்ற வாசகம் இடம்பெற்றுள்ளது.

**குறிப்பு : மேற்படி முடிவுகள் 27/04/2024 அன்று புல்மோட்டை – மஸ்ஜிதுல் முஸ்லிமீனில் இடம்பெற்ற அமீர்மார்கள், உலமாக்களுக்கான ஒன்று கூடலில் உத்தியோகபூர்வமாக வாசித்துக்காட்டப்பட்டன.**